உ

சிவமயம்

## நீர்வை அரச கேசரிப்பிள்ளையார் கோவில்



## ஸ்ரீகணேசசனசமூக நிலைய

# பொன்விழா மலர்

**09 - 09 - 2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவத்தொண்ட நிலையத் தலைவர்
## தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் அவர்களின்

# அருளுரை

இன்றைய சமுதாயம் எதற்கெடுத்தாலும் பெரும்பான்மை வேண்டும் என்கிறது. பெரும்பான்மை ஏற்றுக்கொள்ளக்கூடாது. என்றால் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்கிறார் வள்ளுவர்.

பண்புடையவர்கள் சிலராயினும் அவர்களால்தான் நாடு நலமடைகிறது. உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு. எனவே ஒரு சில நல்லவர்களை வைத்தே உலகம் நிலைபெறுகிறது. பெரும்பான்மை வைத்து உலகம் நிலைபெறவில்லை.

சீலத்தாலும் ஞானத்தாலும், தவத்தாலும் அறிவுப் பண்பாட்டினால் உயர்ந்தவர்களையே உயர்ந்தோராகக் கொள்ள வேண்டும். அத்தகைய பெருமக்களால் இயங்கும் நீர்வேலி ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் இறைவன் திருவருளால் நிலைத்து நின்று நீடூழி தொண்டாற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல ஈசனை வேண்டுமாக!

*சிவத்தொண்ட நிலையம்*
*கஸ்தூரியார் றோட்,*
*யாழ்ப்பாணம்.*

அன்பு ஓம் சி.
அ. செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாருடைய மடத்தில், புரட்டாதி மாதம் 16-09 1949ம் ஆண்டு கணேச வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிருந்த இளைஞர்களும், அதிபர் ரி. வி. மாஸ்டர் அவர்களும் சேர்ந்து ஆரம்பித்து வைத்தார்கள். எனது இளம் வயது நண்பரான மாஸ்ரர் அவர்களால் இந் நிலையம் சிறப்பாக நடந்துவந்தது. இந் நிலையம் சிறப்பாக ஓங்குவதற்கு மாஸ்ரர் அவர்கள் உறுதுணையாக இருந்தார். அவருடைய சேவையை நான் என்றும் மறக்க மாட்டேன். இப்படியான பல சிறப்புக்களுடன் கணேச வாசிகசாலை, வளர்ந்து நீர்வேலி மக்களுக்கு அறிவையூட்ட வேண்டுமென அரசகேசரிப் பிள்ளையாருடைய பாதங்களை வணங்குகின்றேன்.

மேலும் கணேச வாசிகசாலை வளர்ச்சி அடைய வாழ்த்துகின்றேன்

நீர்வை மக்கள் யாவரும் நீடூழி வாழ்க

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள்

அரசகேசரி பிள்ளையார்
தேவஸ்தானம்,
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட

# ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் நீர்வேலி

## பொன் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும்

## தொகுப்பறிக்கை

**தோற்றம்:** 16-09-1949

**இடம்:** அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மடத்தின் ஒரு பாங்கில்

**ஸ்தாபகர்:** நிலையச் சூழலிலுள்ள இளைஞர் பெரியோர்

**அங்கத்தவர்:** 150

ஒரு கிராமச் சூழலில் மக்களை வாசிப்புப் பழக்க மூலம் அறிவை மட்டுமல்ல பொறுமை, தன்னடக்கம் நல்ல உள்ளம் போன்ற இன்னோரன்ன பண்புகளையும் ஒருங்கே வளர்த்துக் கொள்ள முடியும் என்ற பெருநோக்கில் வேரூன்றிய நிலைய நிலையமானது மக்கள் தேவையறிந்து செயற்படலாயிற்று. ஊர வரின் அயராத ஒத்துழைப்பு இடைவிடாத முயற்சி எக்காலத் தும் தளர்வுறாது பணியாற்றி வருகிறது. ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கும் நிலைய மொன்றின் வரலாற்றைப் பார்ப்போமா யின் அதன் தேவை, சேவை என்பன மனதில் ஒலிபாச்சி நிற் கிறது. ஆண்டு தோறும் பல நிகழ்வுகளை நடாத்தி மக்களை வழிப்படுத்தியிருக்கிறது. பல பெரியோர்களை அழைத்து நல்ல கருத்துக்களை மக்கள் முன் விதைத்திருக்கிறது. இத்தகைய நிலைய மொன்றின் சேவையை உற்று நோக்கல் சிறப்பாகும்.

**சேவை**

ஆரம்ப காலத்தில் கிராம மக்கள் வாசிப்புப் பழக்கத்தில் நாட்டம் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். பத்திரிகை சஞ்சிகைகளை கூடுதலாக அறிமுகப் படுத்துவதன் மூலம் வாசிப் போர் எண்ணிக்கை கூட்ட முடியும் என நிலையத்தினர் எண்ணி னர். தமிழ், ஆங்கில நாளிதழ்களும் மாத, வார சஞ்சிகைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் பெறுபேறாக ஆரம்ப அங்கத் தவர் 27 பேரைக் கொண்டிருந்த நிலை படிப்படியாக உயர்வ டையலாயிற்று. கொழும்பு வாழ் ஆர்வலர்களின் உதவியால் பல சஞ்சிகைகள் நாளிதழ்களின் எண்ணிக்கை பெருகலாயிற்று. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு 1960ன் பின்னுள்ள பகுதிகளின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 100றைக் கடந்து நின்றமை விதந்து குறிப்பிடக் கூடிய அம்சமாகும். வீரகேசரி, டெயிலி நியூஸ், கல்கி, கலைமகள் மஞ்சரி, குமுதம், கலைக்கதிர், ஆத்மஜோதி சுதந்திரன் போன்றவை எம்மவரை கவர்ந்த இதழ்களாகும்.

சமயம், வரலாறு, புவியியல், அரசியல் சார்ந்த நூல்கள் பலவும் நூல் நிலையத்தில் பேணப்பட்டு வந்துள்ளன. பலரும் வாசித்துப் பயன் பெற்றனர். அண்மைக் காலத்து அரசியல் நிலமைகள் நூலக வளர்ச்சிப் போக்கில் பெரும் தளர்வை ஏற்படுத்தியது. குறிப்பாக 1995ல் ஏற்பட்ட பாரிய மனித இடப் பெயர்வு சனசமூக நிலையத்தின் முக்கிய சொத்துக்களின் ஒன்றான பல நூல்களை இழந்தது. எனினும் இன்று தினசரிகளை பெருமளவில் வரவழைத்து மனித அறிவுப் பசியை தீர்த்து வருகிறது.

இந் நிலையத்தின் சேவை மேலும் விரிவு பெற்றுள்ளது. இதில் சிறப்பாக இறுதி யாத்திரைக்குரிய வண்டில் ஒன்று சுமார் ரூபா 60,000 செலவில் அமைக்கப்பட்ட அங்கத்தவர் யாவரும் சமம் என்ற நோக்கில் பரிமாறப்பட்டது. இது ஏழை எளியோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பயன் பெற்ற மக்கள் பெரிது வந்திருக்கையில் அரசியல் அவலம் இவ் வாகனத்தையும் பாதித்ததில் வியப்பில்லை. இன்று செயலிழந்துள்ள நிலையில் அது பற்றி சிந்திக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. காலக்கிரமத்தில் திருத்தி செப்பமிட்டு மக்கள் பாவனைக்கு கொண்டு வரும் காலம் வெகு தொலைவில்லை எனலாம்.

## சிறுவர் பாடசாலை

தனிக்கட்டமைப்பில் இயங்கும் அதேவேளை அதன் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் எம் நிலையத்தின் பிறிதொரு சேவையமாக "ஸ்ரீ கணேசா பாலர் பாடசாலை" இயங்கி வருகின்றது. இரண்டு ஆசிரியர்களையும் 60 மேற்பட்ட சிறார்களையும் கொண்டு இயங்குகிறது. காலத்துக்கு பொருத்தமான செயற்பாடுகள் ஆடல், பாடல், விளையாட்டு என்பவற்றினூடாக கலைத்திட்டம் பிள்ளைகளுக்கு ஊட்டப்படுகிறது. 1972 இல் இதன் தோற்றம் முகிழ்ந்து இன்று அலர்ந்து மணம் வீசுகிறது. ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு எல்லாப் பாலர்களும் பரிசு பெற உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்திலேயே பல பரிசில்களை தட்டிக்கொண்ட எம் நிலையத்து இளைஞர் இன்றும் வீறு நடை போட நிலையம் வழி வகுத்து வருகின்றது. கிளித்தட்டு கரப் பந்தாட்டம், கோலாட்டம் போன்ற விளையாட்டுக்கள் இளை ஞரை வெகுவாக கவர்ந்தவையாகும். விளையாட்டுக்கள் வெறு மனே வெற்றியை மட்டும் சுமப்பனவாக இருப்பதாக அமையாது தோல்வியையும் ஏற்கும் மனப் பக்குவத்தையும் எம் இளைஞரி டையே ஊட்டியுள்ளதை அவதானிக்கலாம்.

## சிறப்பித்த பெரியோர் வரிசை

காலத்துக்கு காலம் ஆண்டு விழாக்களின் போதும் விசேட செயற்றிட்டங்களின் போதும் அறிஞர் பெரியோர்களது வருகை எம் நிலையத்தை மேன்மையுறச் செய்துள்ளது.

முன்னைநாள் பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாள ராகவிருந்த திரு. அ. ச. ஞானசம்பந்தன் வருகைதந்து கலந்து கொண்ட நிகழ்வு கவர்ச்சியும் பயனும் மிக்கதாகும்.

அன்றியும் கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் (20-04-1955) தமது விடயத்தை பின்வரும் பா மூலம் பதித்துள்ளார்.

''தண்மை மலி நீர்வேலி திகழ் கணேச
சமூக நூல் நிலையத்தைக் கண்டின் புற்றேன்
உண்மை மலி நூல்களையும் செய்தித் தாள்கள்
ஓங்கு சுவைப் பத்திரிகை தமையும் அன்பர்
மண் மலியும் வாழ்வினிலே இன்பங் காண
வாசித்தார் இந்நிலையம் மேன்மேல் ஓங்கிக்
கண் மலியும் பல நூலின் கோயிலாகிக்
கனத்த பயன் ஈக என்று வாழ்த்தினனே''

பின்னாட்களில் ஈழகேசரி ஆசிரியர் இ. அரியரத்தினம் (20-07-1955) பொன் முத்துக்குமாரு (07-02-1959) தகவல் அதிகாரி குடும்ப நல திட்டம் திருமதி யோகா பாலச்சந்திரன் மற்றும் கு. வன்னியசிங்கம், அ. அமிர்தலிங்கம், வ. பொன்னம்பலம் போன்ற அரசியலாளர்களது வருகையும் சனசமூக நிலையத்தை சிறப்பித்துள்ளது. இப் பெரியார்களது குறிப்புக்கள் நிலையக் குறிப்பேட்டில் பொன் கொண்டு பொறித்த வரிகளாக மிளிரு கின்றன. இவர்களது வைர வரிகள் எதிர்கால வளர்ச்சிக்கு கட் டியம் கூறுவனவாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதாபச் செய்தி

நிலையத்தின் வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றிய பெரியார்களது மறைவு குறித்து அனுதாப தீர்மானங்கள் நிறைவேற்றி அவர்கள் பணி நினைவு கூரும் வழிமுறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த வரிசையில் அண்மையில் மரணமான ஒய்வுபெற்ற வங்கியாளர் திரு. க. பரமநாதன் அவர்களது அஞ்சலியும் நினைவு கூறப்பட்டது. அவரது சிந்தனையில் எம் நிலையத்துக்கு உதவ வேண்டும். என்ற எண்ணம் பெரிதும் விருட்சமாயிருந்தது. அந்த நினைவுப் பிரகாரம் நிலையத்துக்கு 10,000 ரூபா கிடைத்துள்ளது. இப்பணத்தைக் கொண்டு கட்டட பராமரிப்பு உறுதிப் படுத்தப் பட்டுள்ளது. அவரது உதவிக்கு நன்றி தெரிவிப்பது எமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக் காணும் புத்தகக் கோயில்

சிறீ கணேசப்பன் திருப்பெயர் பூண்ட
செந்தமிழ் வாசிகசாலை
அறிவொடு பண்பை அறநெறி அமுதை
அனைவருக்கும் ஊட்டுவதன்றோ!
குறைவிலா நிறைவு கொண்டு நம் சிறுவர்
குழந்தைகள், இளைஞர்கள், முதியோர்
திறமைகள் பயிலும்படி வழி செய்யும்
சீரிய படிப்பகம் வளர்க

சனசமூகத்தின் மேன்மையின் பொருட்டாய்ச்
சரித்திரம், சாத்திரம், சமயம்,
மனநலம், மானம், மானுட நேயம்
மற்றவர் வாழ்வினை மதித்தல்,
என வருகின்ற எவையுமே சிறக்க
எடுத்திடும் முயற்சிகள் பலித்துக்
கனிகளை வழங்கி உதவும் இந்நிலையம்
கதிர்மணி விளக்கென ஒளிர்க

பொன் விழாக் கண்டு பூரண ஒளியாய்ப்
புத்தகப் பண்பினை வளர்த்து
கண்ணெனத் தக்க கல்வியின் செழுமை
காண்பதே நோக்கமாய்ப் பேணி
எண் - எழுத்தென்னும் இரண்டையும் போற்றி
எம்மவர் எழுச்சியை இயக்கி
மண்மிசை நெடுநாள் நீர்வையின் புகழை-
மாட்சியை நிறுவியே மிளிர்க.

08-09-2001

முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Wish the members

Visited the Community Centre building in which a library and reading room are housed· The Secretary Mr. T. Veluppillai is present. It is stated that the building was constructed without government assistance· This is highly commendable. The reading room was a number of magazines and papers. I understand that the members pay their subscriptions regularly to keep their reading room going in addition to the grant. I find that the members are also taking great interest in the field of sport and have been champions in the Inter-Community Centres Meet held in Jaffna.

This Centre deserves encouragement and and financial assitance from Government. I wish the members well.

*(Sgd.)* J. Sapathipillai
D. R. O. V / E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Looking back through the Years –
Impressions of some of our
Distinguished Visitors——

Visited the Sri Ganesha C. C. and was present at the Annual General Meeting held today. They have a Reading room and a playground and doing good work. I understand that they are taking steps to from a library which should be established early.

A healthy and active centre and I wish them all success.

*(Sgd)* **D. Rajendra**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு கந்தையா - பரமநாதன் மறைவு குறித்து நீர்வேலி ஸ்ரீகணேச சனசமூக நிலையம் சமர்ப்பிக்கும்

# நினைவாஞ்சலி

நீர்வைக் கிராமத்தில் பிறந்து மறைந்த பெரியார்களுள் திரு. கந்தையா பரமநாதன் ஒரு மாமனிதர் ஆக மதிப்புப் பெற்றார். இவர் என்றும் எவருடனும் இன்சொல் பேசி அன்புடன் பழகுவர். கிராமப் பொதுமக்கள் இவரின் பண்பை பாராட்டினர். இவர் இந்நிலைய வளர்ச்சிக்காகச் செய்த சேவைகள்.

1) நிலையத்தின் விளையாட்டு மன்றத் தலைவராகவும் போஷகராகவும் சேவையாற்றினார்.

2) 1954ம் ஆண்டு நிகழ்ந்த யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலைய சமாச இறுதிப் போட்டியில் எமது நிலையம் முதலாம் இடத்தைப் பெற்ற விருதை எவரும் மறக்க முடியாது. இவர் சிறந்த கைப்பந்தாட்ட வீரனாக விளங்கினார்.

3) 1958, 59ம் ஆண்டுகளில் கொழும்புவாழ் அங்கத்தவர்களின் நிர்வாகத்தவர்களில் ஒருவராக இருந்து நிலைய உயர்ச்சிக்கு அரிய சேவை செய்தார்.

4) ஓய்வு எடுத்து இக்கிராமத்தில் வாழும் போது எவர்க்கும் இறுதியான சேவைக்குரிய மயான மண்டபம் மாசிவன்பதியில் அமைத்து நிறைவேற்ற முற்பணம் கொடுத்து உதவிய வள்ளல் தன்மையை நாம் பாராட்ட வேண்டும்.

5) இந்நிலையத்திற்கு அமரர் பரமநாதன் நினைவாக அவரது பாரியார் அன்பளிப்பாக 10,000 ரூபா அளித்தமைக்கு என்றும் இந்நிலையம் நினைவு கூரும்.

நிலையத்தின் பொன் விழாக்காண வாழ்ந்த எம் பெரியார் திடீர்மறைவு எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எம் பிரார்த்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பண்பான பாத்திரம்

அமரர் ஸ்ரீமான் கந்தையா பரமநாதன்! என் உள்ளம் கவர் கள்வன்!

அன்னாரின் பெற்றோர், சோதரர் அனைவரும் என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவர்கள். தம்பி பரமநாதன் பாலனாய், பள்ளி மாணவனாய் அமரராகும் வரை என்னுடன் அன்பாய் பழகிய பண்பாளன். என்னிடம் பாடம் கேட்டுப் படித்த சிறப்பினையும் எனக்கு நல்கியவர். இன்று அமரராகிவிட்ட என்து சோதரர் இருவருடன் படித்தவர். அது ஒரு நீண்ட வரலாறு!

என்னுடன் பாசத்துடன் பழகியவர் என்ற மேலான உணர்வினை நல்கிய பெருமகன்; மறக்க முடியாது!

கொழும்பு மாநகரில் இந்தியன் வங்கியிலும் பின்னர் முகாமைத்துவ நிலையில் டுபாய் வங்கியிலும் இறுதியாக ஹற்றன் நஷனல் வங்கியிலும் இணைந்து, உயர்ந்து கண்ணியத்துடன் நற்பணியாற்றி ஒய்வு பெற்ற சிறப்பிற்குரியவர். அவரின் வங்கிச் சேவை அவரின் ஆற்றலுக்கோர் முத்திரை. எல்லோராலும் எளிதில் எய்த முடியாத உயர் நிலை. ஆயினும் அவரோ என்றும் காட்சிக்கெளியன்! வீண் ஆரவாரமற்ற, அமைதியான பெட்டகம்.

தம் குடும்ப உயர்விற்கு அவர் ஆற்றிய அர்ப்பணங்களை நான் அறிவேன். தனக்கென வாழான். தம் இரத்தபாசங்கட்கும் ஏனையோருக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் பல. போற்றற்குரியவை! அவ்வகையிலும் அவருக்கு நிகர் அவர்தான்.

ஒய்வு பெற்றதும் தம் ஊர் வந்து சுற்றம் சூழ, சமூக, சமயப் பணிகளில் உழைக்க விரும்பிய ஆர்வலர். தம் இஷ்ட தெய்வமாம், அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் ஆலய இராசகோபுரப் பணியை முன்னின்று ஆரம்பித்துவைத்த தொண்டன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டு வாழ்ந்து, பயன்மிகு பணிகள் ஆற்றி எமக்கெலாம் வனப்பினைத் தருவார் என நாம் கண்ட கனவுகள், ஆசைகள், எல்லாம் உரிய காலத்திற்கு முன்னரே உதிர்ந்து விட்டன. பரமனின் செயல் அதுவானால், பாமரராம் நாம் என் செய்வோம்? புரியமுடியாத புதிர்கள்!

ஒரு நல்லவரை, உத்தமரை, உயரிய நோக்குடையவரை உரிய நேரத்திற்கு முன்னரே சமூகம் இழந்துவிட்டது.

அமரர், அன்பன், பண்பாளன் ஸ்ரீ பரமநாதனின் ஆத்மா படைத்தவன் பாதத்தில், விண்ணுலகில், பெருஞ்சாந்தியுடன் மகிழ்ந்திருக்க, அன்னாரின் பாசமிகு பாரியார், சோதரர், உறவினருடன் நாமும் இணைந்து பிரார்த்திப்போமாகுக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நீர்வேலி த. ந. பஞ்சாட்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இம் மண்டபத் தோற்றத்துக்கு இடமளித்த விநாயகர் ஆலயத் தர்மகர்த்தாச் சபையினருக்கும், கட்டட அமைப்புக்குப் பணம் உதவிய பேரன்பர்களும் சென்ற 50 ஆண்டுகளில் இந்நிலைய விழாக் களைச் சிறப்பாக நிகழ்த்திய அங்கத்தவர் களும் கட்டட நிதி சேகரிப்பிலும் வாசகர் சாலை சேவையிலும் பெருந் தொண்டாற் றிய பெரியார்களுக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேசசபை செயலர், பணியாளர்கள் அனைவர்க்கும் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும், என்றும் இந்நிலையம் நன்றி பாராட்டும்.

நீர்வேலி
08 – 09 – 2001

பொன்விழாச் சபையினர்

★ ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org